இருக்கின்றார்கள். இங்கே இருக்கின்ற நெசவாளர்கள் இலவச வேஷ்டி, சேலை திட்டத்திற்கும் மற்றும் சீருடைத் திட்டத்திற்காக டிரில் போன்றவை தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இன்றையதினம் இந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதன் நோக்கமே புதிய டிசைன்களை உருவாக்கி மார்க்கெட்டில் போட்டி போடுகின்ற வகையில் தமிழக மக்களை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம். ஆகவே, அந்தப் பகுதியில் தொழில்முனைவோர் முன்வந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் தொகுதி, ராஜபாளையம் ஒன்றியத்திலே ஜவுளிப் பூங்கா அமைத்துத் தர பரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு சாத்தூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்து அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

சொந்தக் கட்டடம்

***5899—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு சார்–பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு சார்–பதிவாளர் அலுவலகம் 1908 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. இக்கட்டடம் கட்டப்பட்டு சுமார் 104 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த அரசுக் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் 52 சார்–பதிவாளர் அலுவலகங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ரூபாய் 50 இலட்சம் வீதம் ரூபாய் 26 கோடி செலவில் அரசுக் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் வழங்கி, அரசாணை (நிலை) எண் 57, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 12–4–2012ன் படி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி கட்டப்பட உள்ள, நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த அலுவலகங்களில் அரக்கோணம் பதிவு மாவட்டம், ஆற்காடு சார்–பதிவாளர் அலுவலகமும் ஒன்றாகும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

போக்குவரத்துப் பணிமனை

***4611—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?